**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,**
**சிறப்புத்தேர்வு -2022(இயல்3,4)**
**ஒன்பதாம் வகுப்பு - தமிழ்**
**காலம் 1.30 மணி மதிப்பெண்: 50**

**அ.உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.(5)**

1.பொருந்தாத இணை எது?
அ)ஏறுகோள் -எருதுகட்டி ஆ)திருவாரூர் -கரிக்கையூர்
இ)ஆதிச்சநல்லூர் -அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் -பட்டிமண்டபம்

2.முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.
ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.
இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

3.பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.
அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்
அ) இணையம் ஆ) தமிழ் இ)கணினி ஈ) ஏவுகணை

4.ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
அதனொடு என்பது எதைக் குறிக்கிறது.
அ)நுகர்தல் ஆ.தொடுணர்வு இ.கேட்டல் ஈ.காணல்

5.வலவன் ஏவா வானூர்தி என்ற அறிவியல் சிந்தனையைக் குறிப்பிடும் நூல் எது?
அ)புறநானூறு ஆ)கலித்தொகை
இ)வைரமுத்துகவிதைகள் ஈ)சீவகசிந்தாமணி

**ஆ.எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.(8)**

6.நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகின்றது?

7.கூட்டுப் புழுவை எடுத்துக் காட்டி கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.

8.மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும் மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?

9.நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

10.வல்லினம் மிகுதல் என்றால் என்ன?

**இ.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.(6)**

11.வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

12.'ஓ, என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

13.அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்பு படுத்துகிறார்?

**ஈ.எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடை அளிக்க.(5)**

14.ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுதன் காரணங்களை விவரிக்க.

15.ஓ என் சமகாலத் தோழர்களே கவிதைக் கருத்துக்களை எழுதுக.

**உ.அடிபிறழாமல் எழுதுக.(5)**

16.'விடல்'என முடியும் குறட்பா .

17.அறிவியல்... எனத் தொடங்கும் வைரமுத்துவின் பாடல்.

**ஊ.பின்வரும் வினாக்கள் அனைத்திற்கும் உரிய முறையில் விடையளிக்க.**

18.உன் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.(5)

19.இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.(5)

20.**பின்வரும் பாடலைப் படித்து நயம் பாராட்டுக.(4)**
பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு எனஎ ரிக்கும்
மங்காத தனற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!
கடலிலே கோடி கோடிக் கதிர்க்கைகள் ஊன்றுகின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளி அளாவ அமைந்தனை! பரிதி வாழி!
பாரதிதாசன்

21.பின்வரும் குறட்பா அலகிட்டு வாய்பாடு கூறுக.(2)
எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

22.பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.(3)



23.பின்வரும் சொற்களுக்குக் கலைச்சொல்லாக்கம் தருக(2)
1.Hero Stone 2.Missile

ஆக்கம்
ச.சேட்டு மதார்சா,ப.ஆ.தமிழ்

Please Send Your Model Questions to our Email Id: padasalai.net@gmail.com